![NUS National University of Singapore]

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 11 December 2021

# உயரிய அறிவியல் விருதை வென்ற சிங்கப்பூரின் ‘பேட்மேன்’

‘பேட்மேன்’ எனச் செல்லமாக அழைக்கப்படும் பேராசிரியர் வாங் லின்ஃபா, ‘சார்ஸ்’ கிருமி வௌவால்களிடமிருந்து வந்தது என்பதைக் கண்டறிந்தவர். இவருக்கு அதிபர் அறிவியல் விருது வழங்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் வாங், மிருகங்களிலிருந்து மனிதர்களைத் தொற்றும் கிருமிகளின் தொடர்பிலான துறையில் வல்லுநர். வௌவால்களிடமிருந்து உருவாகும் நோய்களைப் பற்றி இவர் ஆய்வுகளை நடத்திவருகிறார். அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியான டியூக்–என்யூஎஸ் மருத்துவப் பள்ளியின் வளர்ந்துவரும் தொற்றுநோய் திட்டத்தில் இவர் உறுப்பினர்.

அறிவியல், தொழில்நுட்பம் அல்லது பொருளியல் ரீதியாக நாட்டிற்குப் பலன் தரும் பணியை மேற்கொண்ட அறிவியல் அறிஞர்களுக்கு பிளஸ்டிஏ எனப்படும் அதிபர் அறிவியல், தொழில்நுட்ப விருதுகள் வழங்கப்பட்டுவருகின்றன. அந்த வகையில் பேராசிரியர் வாங் கௌரவிக்கப்பட்டுள்ளார். சிங்ஹெல்த் குழுமத்தின் தலைமை நிர்வாகியான பேராசிரியர் ஐவி இங், அறிவியல், தொழில்நுட்ப, ஆய்வு அமைப்பின் திரு (சர்) பீட்டர் கிளக்மன் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.